**புவிச்சரிதவியல் அளவை மற்றும சுரங்கங்கள் பணியகம்- 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணியகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பணியகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பணியகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பணியகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பணியகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை

பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

## 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு முரணாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்ட 04 விடயங்களின் பெறுமதி சரியாக சீராக்கப்படாமையினால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 1,045 மில்லியன் குறைவாகவும், முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சீராக்கப்பட வேண்டிய 03 விடயங்கள் சரியாக சீராக்கப்படாமையினால் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 8 மில்லியன் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 1,196,346,664 தொகையான முன்னைய கால பகுதியின் சீராக்கங்கள் பிற்போட்ட ரீதியில் சீராக்கி நிதிக் கூற்றுக்களை மீளமைத்து காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் சகல சீராக்கங்களும் திரண்ட இலாப மீதியில் சீராக்கப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 3,153,284 கூட்டுத்தொகையான | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியிருந்த பிரகாரம் அட்டுறு செலவினங்கள் மீளாய்வாண்டின் செலவினமாக சீராக்கி எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு உரிய செலவினத்திற்கான ஒதுக்கீடுகளில் இருந்து மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அட்டுறு செலவினம், அட்டுறு செலவின கணக்கை சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் ஆண்டு இலாபம் அப்பெறுமானத்தால் குறைத்துக் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 88 ஆம் பந்தியின் பிரகாரம் சகல சொத்து வகுப்புக்களுக்கும் உரிய பயன்தரு ஆயுட்காலம் அல்லது பெறுமானத்தேய்வு சதவீதம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் காணி, வேலிகள், கட்டிடங்களை பகுதிகளாக்குதல், அகழ்வின் மேலதிக பாகங்கள், மென்பொருள் மற்றும் துணைப் பாகங்கள் மற்றும் கணனியும் துணைப் பாகங்களும் என்ற சொத்துக்கள் தனியான சொத்து வகுப்பாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண தொகுதியில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த சொத்துக்களின் வகுப்புக்களுக்குரிய பெறுமானத்தேய்வு விகிதம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்குரிய வகுப்புக்கள் ஒதுக்கப்பட்டு பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வு வீதங்களை சரிசெய்து எதிர்காலத்தில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 92 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு | பணியகத்தின் மூலம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்தல் 05 வருடங்களுக்கு ஒரு தடவையாகும். அதுவும் மொத்த சொத்து வகுப்பும் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட போதிலும் தற்போது பாவனையில் காணப்படுகின்ற கொள்விலை பெறுமதி ரூபா 462,950,272 தொகையான நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கி நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதுடன் தேறிய பெறுமதி பூச்சியமான சொத்துக்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்படுவதில்லை. இந்த ஆண்டின் போது காணிகள், கட்டிடங்கள் என்ற சொத்து வகுப்புக்களை மீள்மதிப்பீடு செய்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் எஞ்சிய இருப்புக்களின் பெறுமதி, தேறக்கூடிய பெறுமதி அல்லது கிரயம் என்ற இரண்டில் மிகக் குறைந்த பெறுமதி பெறுமதியிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இருப்புக்களின் தேறக்கூடிய பெறுமதி இனங்காணப்படப்படாமல் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய இருப்பு ரூபா 32,115,617 தொகையான அந்த கிரயத்தின் பெறுமதியின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பணியகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்டிருந்த அவசர கொரோனா இடரின் அடிப்படையில் அதனை தற்காலிகமாக நிறுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. எதிர்வரும் வருடத்தின் போது வருடாந்த இருப்பு கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 10 இன் 39(அ) பந்தியின் பிரகாரம் அரசிறை வருமானத்தை இனங்காண்பதற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை | அகழ்வு அனுமதிப்பத்திரங்களுக் குரிய உற்பத்தி எல்லை அனுமதிப்பத்திரதாரர்களினால் விநியோகித்தல் பிரமாணங்களின் 14 ஆவது மாதிரி பத்திரத்துடன் பணியகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த உற்பத்தி | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்த துடன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,602 மில்லியன் தொகையான அரசிறை வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எல்லையில் உள்ளடங்கியுள்ள மாதிரிகள் பணியகத்திற்கு கிடைக்கும் வரை பணியகத்திற்கு வருடத்திற்குரிய அரசிறை அளவினை நிர்ணயிக்க முடியாதிருந்தது. அந்த உற்பத்தி எல்லையை பெற முடியாதிருந்ததுடன் அரசிறை தொகை எதிர்வு கூறலும் மேற்கொள்ள முடியாதிருந்தது. இந்த நடைமுறைப் பிரச்சினைகளின் காரணமாக பணியகத்தின் அரசிறை தொடர்பாக அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். எனினும், இந்த பிரச்சினைகளை பிரயோக ரீதியில் தீர்த்து வைத்தல் தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது. | |
| (எ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் பிரகாரம் நிதிக் குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த 10 மோட்டார் வாகனங்களுக்குரிய ஆகக் குறைந்த குத்தகை கொடுப்பனவு பெறுமதி கழிவு செய்யப்பட்டு தற்போதைய பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு பதிலாக கழிவு செய்யப்படாத ரூபா 102,600,000 பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் குத்தகை கடன்கொடுத்தோர் மீதி நடைமுறை மற்றும் நடைமுறையல்லா வகையில் சரியாக வகைப்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதி குத்தகை அடிப்படையின் கீழ் 10 வாகனங்களை பெற்றுக் கொளள்ப்பட்டு கணக்கீடு செய்யும் போது ஏதாவது சரிசெய்தல் மேற்கொள்ளப்பட வேண்டி இருக்குமாயின் அதனை மேலும் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஏ) | குருணாகல் பிரதேச அலுவலகக் கட்டிடம் | குருணாகல் பிரதேச அலுவலகக் கட்டிடம் மற்றும் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| மற்றும் அது அமைந்துள்ள காணியின் கொள்வனவு கிரயமான ரூபா 28,000,000 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களாக தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு பதிலாக மொத்த கிரய பெறுமதியும் காணியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் அந்த கட்டிடத்திற்காக பெறுமானத்தேய்வு ஒதுக்கங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் கீழ் தனித்தனியாக இனங்காண்பதற்குரிய பெறுமானத்தேய்வை அறிமுகப்படுத்துவதற்காக சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மஹகனந்தராவ மற்றும் ஹக்மன சுனாமி நிலையங்களில் கட்டிடங்கள் முறையே ரூபா 2,670,527 மற்றும் ரூபா 2,794,651 ஆக நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற இந்த சொத்துக்கள் நிர்மாணிக்கப்பட்ட திகதிகளை உறுதிப்படுத்தி கொள்வதற்கு தேவையான தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இதற்கு பல வருடங்களுக்கு முன்னிருந்து இந்த நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. உரிய அந்தக் கணக்கில் உரிய காணிக்காக கிடைத்த மூலதன செலவினமே காண்பிக்கப்பட்டிருந்தமையால் அந்த பெறுமானத்தேய்வு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கண்டறிந்து ஏதாவது தவறுகள் இருக்குமாயின் அது சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | உரிய பெறுமானத் தேய்வை கணக்கீடு செய்து கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வரி கடப்பாடொன்று இன்றி 04 விடயங்களுக்கு ரூபா 6,662,408 தொகையான பிற்போட்ட வரி பொறுப்பொன்றை இனங்கண்டதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட வருமான வரி செலவினம் அந்த அளவினால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படுமென குறிப்பிடுகின்றோம். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் அறவிட முடியாக்கடன் ஏற்பாட்டிற்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படாதிருந்த துடன் முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோர் அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடுகள் ரூபா 5,097,526 தொகை, வியாபார கடன்பட்டோர் மற்றும் பெற வேண்டிய பெறுமதியிலிருந்து குறைத்துக் கொள்வதற்குப் பதிலாக கடன்கொடுத்தோர் செலுத்த வேண்டிய பெறுமதியாக பொறுப்புக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் எதிர்காலத்தில் ஒதுக்கீடுகள், வியாபார மற்றும் பெறவேண்டிய பெறுமதிகள் கழித்து காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைக் கம்பனியின் மொத்த பங்கு மூலதனத்தில் 66 சதவீதம் அதாவது ரூபா 255,682,009 தொகையான கம்பனியின் மொத்த தேறிய சொத்துக்கள் ரூபா 188,750,125 தொகை உரித்து பணியகத்திற்கு சொந்தமாக இருந்த போதிலும் கம்பனியின் நிதி கூற்றுக்கள் பணியகத்தின் நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் | 2021 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படுகின்ற GSMB தொழில்நுட்ப சேவை தனியார் கம்பனியுடன் ஒன்றிணைந்த கணக்குகளை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அதற்காக எடுக்க வேண்டிய ஆரம்ப படிமுறையாக 2020 ஆம் ஆண்டிற்கான ஒன்றிணைந்த கணக்குகளை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (உ) | நியமத்தின் 27(6) இன் பிரகாரம் நிதியல்லா சொத்து விடயங்களை இலாபத்தில் சீராக்கும் போது உரிய விடயம் தனித்தனியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் சொத்துக்கள் வருடாந்த பெறுமானத்தேய்வாக காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 3,276,492 பெறுமதி காலக்கழிவாக குறிப்பிடப்படாமல் ரூபா 106,782,013 தொகை பெறுமானத்தேய்வில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல்களை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | தளபாடப் பொருட்கள் மற்றும் பொருத்திகள் சொத்து வகுப்பிற்கான ரூபா 325,422 தொகை சீராக்கமொன்று (குறைவொன்று) மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பயன்படுத்துவதற்கு முடியாதுள்ள நிலைமையில் காணப்பட்ட ரூபா 325,422 தொகையான தளபாட உபகரணங்களை பழுதுபார்த்து கஷ்ட பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் போதியளவான வெளிப்படுத்தல் களை மேற்கொள்ளல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருள் சட்டம் | | | |
| | 1997 சனவரி 10 ஆந் திகதிய 958 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 33(4) ஆம் சுரங்க அகழ்வு கட்டளை | சுரங்க உற்பத்திகளில் குறித்த காலத்தில் வியாபார பெறுமதி சலுகை வழங்கக் கூடிய கழிப்பனவுகள் மற்றும் அரசிறை செலுத்துதல் வேலைத் திட்டங்களுக்காக செயலாளருக்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டு பணிகள் தொடர்பாக காலரீதியில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது நிதிப் பிரமாணங்களை திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் II ஆம் பகுதியில் 6.2(இ) பிரிவு மற்றும் மகாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் 2018 யூலை 05 ஆந் திகதிய 02/09/01/அமப/2018 ஆம் இலக்க கடிதம் | சட்டத்தின் பிரகாரம் ½ மாத சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடைகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும் முழு மாத சம்பளத்தை அடிப்படையாகக் கொள்ளப்பட்ட மையினால் 2016-2019 காலத்தில் சேவைகளிலிருந்து விலகிச் சென்ற 21 ஊழியர்களுக்கு ரூபா 8,352,114 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளதுடன் பணிக்கொடை கொடுப்பனவுக்காக முழு மாத சம்பளத்தின் | பணியகம் பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அது தொடர்பாக தொழில் திணைக்களத்தின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேலதிக கொடுப்பனவுகள் ஏற்படாதிருந்தமையினால் அறவிடல் மேற்கொள்ள வேண்டி இருக்கவில்லை. பொது முயற்சிகள் குழுவின் கலந்துரையாடலின் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிக் கொடைகளை செலுத்து வதற்கும் மேலதிகமாக செலுத்தப் பட்டவைகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடிப்படையில் ரூபா 159,753,034 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணிக்கொடைகளை மீள அறவிடுமாறு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் 2018 மே 10 ஆந் திகதி அறிவித்திருந்த போதிலும் அந்தப் பணம் மீள அறவிடப்பட்டிருக்க வில்லை. | போது தற்போது அதற்குரிய சகல அங்கீகாரமும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | 1988 இன் 56 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23v ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சர் விநியோகித்த 1993 யூன் 24 ஆந் திகதிய 772/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | சுரங்கம் மற்றும் கனிப் பொருள் அகழ்வின் போது ஒட்டுமொத்த பிரதேசமும் 10 ஹெக்டயரை விஞ்சிய நிலப்பரப்பில் சுரங்கங்கள் அகழ்வு மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக 18 ஹெக்டயர் பிரதேசத்தின் கனிய மணல் அகழ்வதற்காக IML/A/HO/1623 ஆம் இலக்க அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | 2009 இன் 66 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான கட்டளை 1993 நவம்பர் 26 ஆந் திகதிய 772/22 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானி மற்றும் சட்டம் என்பவ விநியோகிப்பதற்கு முன்னர் இலங்கை கனிய மணல் கம்பனியால் இயந்திரங்கள் ஊடாக அகழ்வு மேற் கொள்ளப்பட்டு வந்ததுடன் அந்த வர்த்தமானி மூலம் அப்போதய இயந்திர ரீதியில் அகழ்வு மேற்கொண்ட அனுமதிப்பத்திர உடமையாளர்களுக்கு 1994 ஏப்ரல் 26 ஆந் திகதிக்கு முன்னர் கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களைப் | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெற்றுக்கொள்வதற்காக சலுகை காலமொன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 10 ஹெக்டேயரை விட மிகைக்கும் பிரதேசமொன்றுக்காக அப்போதய 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அதி காலமாக பராமரிக்கப்பட்டு வரும் இந்த அகழ்வு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு சட்டரீதியான தடையொன்று காணப்படவில்லை. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 365(1) | குறித்த நிதியாண்டில் செலுத்துவதற்காக மாத்திரம் முற்பணம் வழங்கப்படுகின்ற போதிலும் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் உள்நாட்டு கொள்வனவுகளுக்காக வழங்கப்பட்டு தீர்க்கப்படாதுள்ள முற்பண மீதிகளின் பெறுமதி ரூபா 7,608,105 ஆகும். | இதில் GPRS System இற்காக ரூபா 1,927,810 தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனினும் இதில் System ஒன்று பூர்த்தி செய்யப்படாதிருந்த மையினால் சொத்துக்களாக கொண்டு வர முடியாமல் இது முற்பண கணக்கில் காணப்பட்டது. Ewish Solutions (Pvt) Ltd இற்காக செலுத்தப்பட்ட முற்பணத் தொகையில் அந்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமையினால் முற்பண கணக்கில் காண்பிக்கப்பட்டது. ஏனைய முற்பணங்களுக்காக உரிய பிரிவிற்கு முற்பணத்தை தீர்த்து | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து கடிதம் விநியோகிக்கப்பட்டுள்ளது | |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(5) | வழங்கப்படுகின்ற முற்பணம் நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அதிகமாக தாமதப்படுத்த முடியாதிருந்த போதிலும் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களின் தீர்க்கப்படாதுள்ள மீதி ரூபா 6,329,943 ஆகும். | கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள முற்பணமாக ரூபா 1,500,000 வழங்கப்பட்டிருந்ததுடன் அது 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. இது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது. களப் பரிசோதனைக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முற்பணத் தொகையில் ரூபா 4,091 தொகை 1994 மற்றும் 1996 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்றது. அதன் காரணமாக இந்த முற்பணங்களை புத்தகத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 260,000 தொகை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. ரூபா 1,047,822 தொகையினை அறவிடுவதற்காக உரிய பிரிவுகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 757(2) மற்றும் 507(3) | கிரயம் ரூபா 1,208,686,416 ஆன நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டிற்குரிய மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணியகத்தில் காணப்படுகின்ற இருப்புக்களுக்குரிய இருப்பு மெய்மையாய்வு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட்டு மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்கொண்டு உரிய அறிக்கை தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (iv) | நிதிப்பிரமாணம் 702(3) | நில அதிர்வு மற்றும் சுனாதி அவதானிப்பு நிலையம் மற்றும் ஆய்வுகூட கட்டிடங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்குரிய உடன்படிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்குரிய 203 பக்கங்களை உடைய பதிவேடொன்று (ஒப்பந்த உடன்படிக்கை) பெறுகைகள் பிரிவின் பொறுப்பில் உள்ளது. அந்த உடன்படிக்கை கணக்காய்வில் பரீட்சித்து பார்க்கக் கூடிய நிலையில் உள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31.11, 31.15 ஆம் பிரிவுகள் | கிருமினல் குற்றங்களின் கீழ் 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதி முதல் வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த அகழ்வு பொறியியலாளருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் வேலை நீக்கம் செய்யப்பட்ட கால எல்லைக்குரிய ரூபா 954,521 அரை சம்பளம் மற்றும் ரூபா 369,171 தொகையான ஊக்குவிப்பு படி மற்றும் மிகையூதிய படிகள் செலுத்தப்பட்டிருந்தது. ஒழுக்காற்று பரிசோதனைக் கட்டளையொன்றுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதி முதல் அந்த உத்தியோகத்தர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். | இதில் ஒரு உத்தியோகத்தருக்கு சகல குற்றங்களிலிருந்தும் விடுதலை அளிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை தற்போதும் நடாத்தப்படுகின்றது. அவரிடமிருந்து பணியகத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தி | பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கு கௌரவ அமைச்சரின் பரிந்துரைக்காக 2020.06.28 ஆந் திகதி சுற்றாடல் அமைச்சில் கூட்டம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அமைச்சிலிருந்து அறிவித்தல் வழங்கப்பட்டதன் பின்னர் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2002 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1232/14 ஆம் இலக்க மற்றும் 2017 நவம்பர் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று கட்டளை | இலங்கையின் சுரங்க அகழ்வு மேற்கொள்ளப்படுகின்ற கம்பனியொன்றின் மொத்த பங்கு உரிமை வெளிநாட்டு உரித்து 40 சதவீதம் வரையாக இருக்க வேண்டியதுடன் அந்த எல்லையினை விஞ்சி வெளிநாட்டு உரித்து காணப்படுமாயின் இலங்கை முதலீட்டுச் சபையின் விசேட அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் இலங்கையில் காரியம் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்ற போகல, கிறப்பைட் கம்பனியில் மொத்த பங்குகளின் உரித்து 89.91 சதவீதமும் 02 வெளிநாட்டு கம்பனிகளுக்கு உரியதாக இருந்ததுடன் இந்தக் கம்பனிகள் இலங்கை முதலீட்டு சபையிலிருந்து அவ்வாறு அங்கீகாரம் பெற்று அல்லது அந்த சபையுடன் முதலீட்டு உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. எனினும் இது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் இந்தக் கம்பனிக்கு சிறிய தங்க அகழ்வுக்காக | 2009 இன் 66 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் கீழ் அகழப்படுகின்ற கனிப்பொருட்களின் உரித்துக்காக அரசிறை விற்பனை விலையில் தற்போது உள்நாட்டு விற்பனையாயின் 06 சதவீதமும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது 07 சதவீதமும் கழிக்கப்படுகின்றது. அவ்வாறு அரசிறை சதவீதங்களின் முன்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் செய்யப்பட்டிருந்தமை மற்றும் அனுமதிப்பத்திரம் அச்சிடும் போது சரியான சதவீதம் உள்ளடக்கப்படாதிருந்த போதும் அரசிறை அறவிடல் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இடம்பெற்றுள்ள கைவிடல்களை மீண்டும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை | வெளிநாட்டு நாணயமாற்று கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கோ அல்லது அங்கீகாரமின்றிய கம்பனிக்கு அகழ்வு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பணியகத்தினால் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப் பட்டிருந்தது. | 02 | வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கூறப்பட்ட சட்டம் பிரமாணங்களுக்கு இணங்க கைத்தொழில் அகழ்வு ஏ மற்றும் பீ குழுக்களின் அனுமதிப் பத்திரதாரர்களுக்கு கனிப்பொருள் ஏற்றுமதிக்காக கோருவதற்கு சட்டரீதியான பின்புலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 773,685,180 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 158,266,318 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 615,418,863 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அறவிடப்பட்ட அரசிறை திறைசேரிக்கு மீளாய்வாண்டில் அனுப்பப்படாமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

| வருமானம் | 2020 | 2019 | வருமானத்தின் அதிகரிப்பு / குறைவு சதவீதம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| வருமானம் | 2,025,438,786 | 2,476,349,149 | (18) | கொவிட் 19 தொற்று நோய் தாக்கத்தினால் மீளாய்வாண்டின் அரசிறை வருமானம் மற்றும் அரசிறை பத்திர வருமானம் குறைவடைந்தமை |
| ஏனைய வருமானம் | 77,637,587 | 92,919,595 | (16) | அகழ்வு பிரிவின் ஏனைய வருமானம் குறைவடைந்தமை. |
| செலவினம் | | | | |
| செயற்பாட்டு செலவினம் | 650,901,098 | 1,960,220,410 | (66) | மீளாய்வாண்டின் அரசிறை திறைசேரிக்கு அனுப்பப்படாமை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) போகல கிறேபைட் கம்பனிக்கு பணியகத்தினால் அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் | | |
| (i) இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வெளியீடாக 2018 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட "பொருளாதாரத்திற்கு ஏற்படைய இலங்கைக்குரிய கனிய வளங்கள்" என்ற பெயரில் நூலொன்றில் குறிப்பிடப்பட்ட விதத்தில் தற்போது இலங்கைக்கு நனோ தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த துடன் இந்த நனோ தொழில்நுட்பத்தின் மூலம் காரியங்களுக்காக மிகை பெறுமதி வழங்கக் கூடியதாக இருந்தமை அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் நனோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கிறபீன் 01 கிராம் ரூபா 150,000 (கிலோ கிராம் 01 இன் பெறுமதி ரூபா 150 மில்லியன்) அளவான உயர்ந்த விலையொன்று காணப்படுவதுடன் கம்பனியால் அகழ்வு செய்யப்படுகின்ற காரியமங்களின் பூர்த்தி அல்லது அரை பூர்த்தி உற்பத்திக்கு உட்படுத்தப்படாமல் மூலப் பொருள் நிலையில் ஏற்றுமதி | காரியமில் உள்ள காபன் சதவீதத்தின் பிரகாரம் கனிப்பொருளின் பெறுமதி அதிகாத்துச்செல்லும். அதன் பிரகாரம் காபன் சதவீதம் 80-90, 90-95, 95-100 போன்ற சதவீதமாக ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் அவற்றுக்கிடையே காபன் சதவீதம் காபன 95-99 சதவீத உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் காபன் சதவீதம் 80-90 களில் விலை குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற கனிப் பொருட்களின் காபன் சதவீதத்தின் பிரகாரம் சந்தை விலை தீர்மானிக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் காபன்களின் அரசிறை அறவிடப்பட்டுள்ளது. கிறபீன் தயாரித்தல் தொடர்பாக இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் தற்போது ஆராய்ச்சியினை மேற்கொள்கின்றது. எதிர்காலத்தில் இந்த நனோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கிறபீன் உற்பத்தியை செய்வதாயின் இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது விலைகளின் பிரகாரம் ஏற்படுகின்ற அரசிறை | காரியம் மிகவும் குறைந்த தொகையில் மூலப்பொருளாக ஏற்றுமதி செய்வதற்கு பதிலாக நனோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பூர்த்தி அல்லது அரை பூர்த்தி உற்பத்தி தயாரித்து ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டதன் காரணமாக இலங்கைக்கு கிடைக்க வேண்டியிருந்த கணிசமான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. கம்பனியால் 2017-2019 ஆகஸ்ட் காலத்தில் அகழ்வு செய்யப்பட்ட காரியம் மெற்றிக்தொன் 6,420.68 ஏற்றுமதி செய்ததனால் ரூபா 1,747.21 மில்லியன் வருமானம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுமதி சேர்க்காமல் மூலப் பொருளாக காரியம் கிலோகிராம் 01 ரூபா 270 ஆன மிகக் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டு அதன் அடிப்படையில் அரசிறை செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த ஏற்றுமதி விலை மற்றும் மூலப் பொருள் விலைகளுக்கிடையே நூற்றுக்கு 55555556 சதவீதமான பெறுமதி இழக்கப்பட்டிருந்தது. | கணிப்பீடு செய்யப்படுகின்றது. | |
| (ii) | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் உரிய கம்பனிக்கு ஒரு வருட காலத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிகமின்கப்பட்டிருந்த துடன் அது வருடாவருடம் நீடிக்கப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக தொல்பொருளியல் திணைக்களத்தினால் கலிகமுவ பிரதேச செயலகத்திற்கு உரிய கம்பனிக்கு அகழ்வுக்கான வருடாந்த புதுப்பிக்கும் அடிப்படையில் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பிரதேச செயலாளரினாலும் அகழ்வு அனுமதிப்பத்திரம் வருடத்தினால் நீடிப்பதற்கு புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகத்திற்கு தமது பரிந்துரை | போகல கிறபிட் காரியக் கம்பனிக்குரிய இந்த அகழ்வு அனுமதிப்பத்திரத்திற்கு சொந்தமான காணி பிரதேச செயலகத்திற்குரிய காணி அல்லாமையால் இருந்தமையால் பணியகத்தின் சட்டம் மற்றும் பிரமாணங்களின் கீழ் பிரதேச செயலாளருக்கு சொந்தமான காணி அல்லாதிருந்தமையினால் பணியகத்தின் சட்டம் மற்றும் பிரமாணங்களின் கீழ் பிரதேச செயலாளரின் பரிந்துரையை பெற்றுக் கொள்ளல் அவசியமற்று இருந்தது. மேலும் போகல காரியச் சுரங்கம் 100 வருடங்களுக்கு மேல் பழைய சுரங்கமாக இருந்த போதிலும் அந்த சுரங்கம் 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் | பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கையின் அடிப்படையில் அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடிக்காலம் ஒரே தடவையில் பல வருடங்களினால் நீடிக்கப்பட முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் அகழ்வு அனுமதிப்பத்திரமும் வருடாந்தம் புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடி காலஎல்லை 2018 நவம்பர் 02 முதல் 2028 நவம்பர் 02 வரை 10 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. | கனிபொருள் சட்டம் வருவதற்கு முன்னிருந்து காணப்படுகின்ற சுரங்கமாக இருந்தமையை மேலும் குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | |
| (ஆ) | 2017 மே 22 ஆந் திகதி அமைச்சரவை மேற்கொண்ட அறிவித்தலின் பிரகாரம் கனிய வளங்கள் தொடர்பாக தேசிய கொள்கையொன்று தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பணியகம் கனிய வளங்கள் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை தயாரித்து சுற்றாடல் அமைச்சிற்கு அனுப்பியுள்ளது. | தயாரிக்கப்பட்ட இந்த தேசிய கொள்கைக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (இ) | கருங்கல் அகழ்வு அளவை இனங்காண்பதற்கு ஆய்வுரீதியான முறைமையொன்று இதுவரை அங்கீகரிக்கப் படாதிருந்ததுடன் கருங்கல் அகழ்விற்காக ஈடுபடுத்தப்படுகின்ற வெடிபொருளின் இரண்டு மடங்கு அகழ்வு செய்யப்பட்ட கியூப் அளவாக கருதி அரசிறை அறவிடப்பட்டிருந்தது. | பணியகத்தினால் உள்ளபடியான அகழ்வுகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற அளவுடன் ஒப்பிடும் போது பயன்படுத்தப்பட்ட வெடிபொருட்களின் அளவு தொடர்பாக பகுப்பாய்வு செய்து ஏற்றுக்கொள்ளக் கூடிய முறைமையொன்று தற்போது தயாரிக்கப்பட்டள்ளதுடன் அது சார்ந்த அரசிறையை கணிப்பிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆய்வுரீதியான முறைமையொன்றை விரைவாக தயாரித்தல் வேண்டும். |
| (ஈ) | யான் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட 1,343,810 கியூப் மண், 3,397 கியூப் | இது தொடர்பாக பணியகத்தினால் உரிய கம்பனிக்கும், நீர்ப்பாசன திணைக்களத்திற்கும் பிரதியுடன் உரிய நிலுவை | இந்த நிலுவைப் பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மணல் என்பவற்றுக்காக முறையே கிடைக்க வேண்டிய ரூபா 26,876,200 மற்றும் ரூபா 543,490 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 27,419,690 தொகையான அரசிறை ஒப்பந்த கம்பனியிலிருந்து மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரசிறை பணத்தை செலுத்துமாறு சில கடிதங்களும் மற்றும் நினைவூட்டல் கடிதங்களும் இதுவரையில் அனுப்பப்பட்டுள்ளது. கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் தற்போது உரிய பணம் செலுத்துகைகள் மேற்கொள்ளப்படுதவதில்லை. | எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் 28(4) ஆம் பிரிவின் பிரகாரம் கருங்கல் உற்பத்தி போக்குவரத்திற்காக அனுமதிப் பத்திரம் வழங்கும் திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. உரிய ஏற்பாடுகளுக்கு முரணாக 2019 திசெம்பர் 13 ஆந் திகதிய 19/நானாவித(064) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மணல், மண் மற்றும் களி போக்குவரத்திற்காக 2019 திசெம்பர் 04 ஆந் திகதி முதல் 2020 மார்ச் 16 ஆந் திகதி வரை போக்குவரத்து அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் நிறுத்தப்பட்டிருந்தது. அந்தக் கனிப்பொருட்களுக்காக அரசிறை போக்குவரத்து அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது கட்டணம் அறவிடப்படுகின்ற போதும் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் செயலிழக்கின்ற போது அகழ்வாளர்களிடமிருந்து அரசிறையை அறவிடுவதற்கு மாற்று திட்டமுறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பணியகத்தால் அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்ற அகழ்வு அளவுகளை நிர்ணயிக்க வேண்டியிருந்ததுடன் மணலுடன் ஒப்பிடும் போது கணிசமான அளவு கருங்கல் அகழ்வு செய்ய முடியாதிருந்ததுடன் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு அண்மித்த அளவொன்று வெடிக்கச் செய்யப்பட்டு கனிப்பொருள் கிடக்கின்றமையால் அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் மூலம் போதியளவான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது எதிர்பார்க்க முடியும். மேலும் 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் பிரகாரம் கருங்கல்லுக்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வழங்கவேண்டியிருந்த போதிலும் கருங்கல்லுக்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வழங்கியதால் அந்த கனிப்பொருள் விற்பனை விலைக்கு பாதகமான தாக்கம் அளித்திருந்தமையும், கனிப் பொருள் அனுமதிப்பத்திரம் மூலம் போதியளவான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் | கருங்கல்லுக்கான போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்படுகின்றதா என்பது பணியகத்தினால் கருங்கல்லுக்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரம் விநியோகிக்ப்படாதிருந்த துடன் அதற்கான தேவையும் எழுந்திருக்கவில்லை. பணியகத்தின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக செய்து கொள்ளும் சந்தர்ப்பத்தின் போது அரசிறையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படாத காலத்திற்காக பின்னர் அரசிறை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் பிழையானதாகும். | |
| (ஊ) | 2009 இன் 69 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப் பொருள் (திருத்த) சட்டத்தின் 2(உ) பிரிவின் பிரகாரம் கனியங்களுக்கான பெறுமதியை சேர்ப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகள் உபயோகப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் பணியகத்தினால் அறிமுகப்படுத்தப்படாமையின் காரணமாக அகழ்ந்தெடுக்கப்பட்ட மீறிறன் கனிப்பொருட்கள், மணல் மற்றும் பளிங்கு கனியங்களுக்கான பெறுமதி சேர்க்கப்படாமல் மூலப்பொருட்களாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. | கனிப்பொருட்களின் பெறுமதியை சேர்த்துக் கொள்வதற்கு நிலத்திலிருந்து பெறப்படுகின்ற கனிப்பொருட்களை ஏதாவது மாற்ற நிலைமைக்கு உட்படுத்துதல் வேண்டும். அதன் பிரகாரம் நிலத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்படுகின்ற கனியங்கள் அந்த முறையிலேயே சந்தைக்கு அனுப்பப்படுவது இல்லை. கனிய மணல் கடற்கரையோரங்களிலிருந்து பெறப்படுகின்ற இல்மனைட், றூட்டைல், சர்க்கோண் ஆக மாற்றப்பட்டு அதன் பிரகாரம் பெறுமதி சேர்க்கப்படுகின்றது. மேலும் நிலத்திலிருந்து பெறப்படுகின்ற காரியம் அந்த முறையிலேயே சந்தைக்கு அனுப்பப்படுவதில்லை. அந்த கனிப்பொருட்கள் | அகழ்ந்தெடுக்கப் படுகின்ற காரியம், கனிய மணல் மற்றும் பளிங்குகளின் பெறுமதி சேர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பெறுமதி சேர்த்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் அதில் முன்னர் காணப்பட்ட பெறுமதியை சேர்த்தல் மாத்திரம் பணியகத்தின் பொறுப்பாகும். அதாவது ஆகக்குறைந்த இந்த கனியங்களை அரை வாசி பூர்த்திப் பொருட்களாக உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது தொடர்பாக உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடப்படுகின்றது. | |
| (எ) | பணியகத்தினால் 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையா காலப்பகுதியில் அறவிடப்பட்டிருந்த ரூபா 8,488 மில்லியன் தொகையான அரசிறை வருமானம் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 1992 இன் 38 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணியகத்தின் செலவினங்கள் தீர்க்கப்பட வேண்டியது உழைக்கின்ற வருமானத்திலிருந்து ஆகும். சகல அரசிறை பணமும் திறைசேரிக்கு அனுப்புவதற்கு சட்டரீதியான நிலைமையொன்று பணியகத்திடம் காணப்படவில்லை. எனினும் பணியகம் மிகை பணத்தை வருடாந்தம் பொதுத்திறைசேரிக்கு அனுப்புகின்றது. மேலும் 2016 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படுகின்ற கொழும்பு துறைமுக நகர செயற்திட்டத்திலிருந்து கிடைத்த அரசிறை பணம் பணியகத்தின் அரசிறை வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் கீழே குறிப்பிடப்படுகின்ற கொழும்பு துறைமுக நகர செயற்திட்டத்திலிருந்து கிடைத்த பணம் புத்தகங்களில் வைத்து சீராக்கமாக திறைசேரிக்கு அனுப்பப்பட்ட பணமாக | அரசிறை வருமானம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். |

| | | |
| --- | --- | --- |
| | கருதி கணக்குகள் வைக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2016 முதல் 2018 ஆம் ஆண்டு வரை பின்வரும் பணத்திலிருந்து ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பப்பட்ட பணம் வருடாந்தம் அதிகரிக்க வேண்டியிருந்தது. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மணல் அகழ்விற்காக வழங்கப்பட்ட 13 அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக பணியகத்தின் பணிப்பாளர் (சுரங்க பாதுகாப்பு) இனால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது சகல அனுமதிப் பத்திரங்களிலும் குறிப்பிடப்பட்ட அகழ்வுப் பிரதேசம், ஆழத்தை விஞ்சி அகழப்பட்டிருந்ததுடன் பணியகத்திற்கு அரசிறை வருமானம் குறைவாக அறவிடப்பட்டிருந்தமையும் அனுமதிப் பத்திரத்திற்காக அறவிடப்பட்ட வங்கி பிணை போதியளவில் இல்லாதிருந்தமையும் அது அதிகரிக்க வேண்டி இருந்தமையும் அவதானிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான நடவடிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் வங்கிப் பிணையை அதிகரித்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அகழ்வு நிலத்தை புனரமைப்பதற்காக ஏற்படுகின்ற செலவினத்திற்கு அண்ணளவான தொகையொன்று வங்கி பிணையாக பெற்றுக் கொள்ளும் திட்ட முறைமையொன்று தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை அண்மித்த தினங்களில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அகழ்வு நிலத்தினை புனரமைப்பதற்கு ஏற்படுகின்ற செலவினத்திற்கு அண்ணளவான தொகையொன்று வங்கிப் பிணையாக அறவிடப்படல் வேண்டும். அவ்வாறே அகழ்வு நிலத்தை தொடர்ச்சியாக பரீட்சித்து அவற்றில் அகழ்வு செய்யப்பட்ட இடங்களை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மண் அகழ்விற்கான அனுமதிப் பத்திரத்திற்கான | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இந்த விடயங்கள் தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய | உரிய நிலுவை அரசிறை மற்றும் தண்டப்பணம் என்பன அறவிட வேண்டி இருந்ததுடன் |

| | | |
|---|---|---|
| கட்டளையின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள 02 அனுமதிப்பத்திரங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் 10,382 மண் கியூப்களிற்காக ரூபா 287,010 தொகையான அரசிறை வருமானம் மற்றும் தண்டப்பணம் என்பன அறவிடப்பட்டிருக்க வில்லை. அனுமதிப்பத்திர எல்லையில் அதற்குரிய மண் கியூப் 2,201 அனுமதியற்ற வகையில் அகழப்பட்டிருந்தது. அவ்வாறே அகழ்வு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை 7 மற்றும் உடன்படிக்கை நிபந்தனை 2 என்பன மீறப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்த போதும் அதற்குரிய ரூபா 60,000 வங்கி பிணை விடுவிக்கப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனையின் பிரகாரம் மண்சரிவினை தடுப்பதற்கான சிறந்த முறைமையொன்று பேணிச் செல்லல், மண் சேதமடைவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல், காணியின் எல்லையைச் சுற்றி 05 மீற்றர் நிலக் கூறொன்றை அகழாமல் விடல், அகழ்வு நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட மெற்றிக் கிறபீட் எல்லையில் பேணிச் செல்லல் மற்றும் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட காணிகளை புனரமைத்தல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க | பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அகழ்வு செய்யப்பட்ட நிலத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அவ்வாறே அகழ்வு நிபந்தனைகளை மீறியமை தொடர்பாக அகழ்வாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | அநுராதபுரம் மாவட்டச் செயலகத்திற்குரிய காணியொன்று முறையாக கையேற்கப்படாமல் அந்தப் பிரதேசத்தில் பிரதேச அலுவலகம் நிர்மாணிப்பதற்காக 2014 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 3,914,563 தொகை மற்றும் ரூபா 12,225,173 தொகையான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | புவிச்சரிதவியல், அளவை, சுரங்க பணியகத்தின் அனுராதபுர பிரதேச அலுவலகம் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களில் நீண்டகாலமாக நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. இதன் போது பொது மக்களின் சேவைகளினை மிகவும் வினைத்திறனாகவும் முறையாகவும் வழங்குவதற்காக நகர வலயத்தில் இடவசதிகள் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தமையினால் மாவட்ட செயலகத்திலிருந்து அந்த அலுவலகத்தின் இடவசதிகள் பணியகம் கோரியிருந்தது. அவ்வாறான இடவசதிகள் காணப்படாமையின் அடிப்படையில் மாவட்ட செயலக நிலம் அரசாங்கத்தின் காணியாக இருந்தமையினால் அதில் அலுவலகம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலக இடத்தில் உள்ள ஏனைய அரசாங்க நிறுவனங்கள் வாடகை செலுத்தும் பின்புலத்தில் புவிச்சரிதவியல், அளவை, சுரங்க பணியகம் வாடகை செலுத்தாமல் தமது கட்டிடமொன்றை அரசாங்கத்தின் காணியில் நடாத்திச் செல்லும் பொருளாதார ரீதியில் சாதகமானதாக காண்பிக்கப்பட்டமையினால் இதற்காக இணங்கியிருந்தது. இந்தக்காணி மாவட்ட செயலக நிலத்தின் காணியாக | எதிர்காலத்தில் இவ்வாறான கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது காணி முறையாக கையேற்கப்பட்டு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இருந்தமையினால் கையேற்றல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | |

3.3 **பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அநுராதபுர பிரதேச அலுவலகத்தின் 02 ஆம் மாடி ரூபா 11,545,178 தொகை செலவில் நிர்மாணிப்பதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2 இன் பிரகாரம் போட்டியாளர் கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படாமல் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இலங்கை கடற்படைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகை நடைமுறைகள் இன்றி மதியுரையாளர் ஒருவர் இந்த நிர்மாணப் பணிகளுக்காக நியமிக்கப்பட்டு ரூபா 579,995 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய மதியுரையாளர் பெறுகைகள் வழிகாட்டியின் 7.3.1(ஆ) இல் குறிப்பிடப்பட்டள்ள நியதிகளுக்கு முரணாக அந்தப் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். | அனுராதபுர பிரதேச அலுவலகத்தை வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லுதல் அதிக தொகையொன்றை செலவிட வேண்டியிருந்தமையின் காரணமாக பணியகத்திற்குரிய மாவட்ட செயலக வளவில் காணப்பட்ட கட்டிடத்தின் இரண்டாவது மாடியை விரைவாக நிர்மாணித்து அனுராதபுர பிரதேச அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக ஸ்தாபித்தல் முகாமைத்துவத்தின் தீர்மானமாக இருந்தது. அதன் போது பொறியியலாளர் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட தொகையில் (தொழிலாளர் கூலியின்றி) நிறைவேற்றுவதற்காக இலங்கை கடற்படையுடன் இணங்கியிருந்த போதிலும் அந்தப் பணிகளை விரைவாக நிறைவேற்றும் இயலுமை இலங்கை கடற்படைக்கு காணப்பட்டமையால் உரிய ஒப்பந்தம் பணியகத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்டிருந்தது. போட்டியாளர் பெறுகை நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் நோக்கில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்ட போதிலும் உரிய பணிகள் பணிப்பாளர் | பெறுகை வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நேரடியாக இலங்கை கடற்படைக்கு கையளிக்கப்பட்டமையால் தொழில்நுட்ப மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கும் அனுப்பப்பட்டிருந்தது. | |
| (ஆ) 51 வாகனங்களுக்காக ரூபா 408,000 செலவில் GPS Tracking System பொருத்தப்பட்டிருந்ததுடன் இதற்குரிய மதிப்பீடு, அங்கீகாரம், வழங்குனர் தெரிவு செய்யப்பட்ட முறை, உரிய கொடுப்பனவு கோவைகள் என்பன கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய கோவைகள் எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய கோவைகளை விரைவாக கணக்காய்விற்கு கையளித்தல் வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புறக்கோட்டையில் அமைந்துள்ள காணியில் ரூபா 585,147,480 தொகை செலவில் நில அதிர்வு மற்றும் சுனாமி அவதானிப்பு நிலையம் மற்றும் ஆய்வுகூட கட்டிடம் என்பன நிர்மாணிக்கப்படுகின்ற போதிலும் அதற்குரிய காணியை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்தத்தின் நிர்மாணத்திற்காக செலவான ரூபா 383,193,671 தொகைக்காக மாத்திரம் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் ஒப்பந்தத்தின் அவசர தேவைகள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக செய்யப்பட வேண்டிய கூட்டுப்பெறுமதியான ரூபா 201,953,810 தொகைக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | புவிச்சரிதவியல் அளவை, மற்றும் சுரங்கப் பணியகம் தாபிக்கப்பட்டுள்ள காணிக்குரிய 2011.12.08 ஆந் திகதிய 10/2859/527/001 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் புறக்கோட்டை எப்பிட்டமுல்ல வீதியில் 569 ஆம் இலக்க இடத்தில் பணியகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 205 பேர்ச் நில அளவினை பணியகத்தின் பேரில் கையேற்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் பணியத்தினால் பணம் செலுத்தப்பட்டிருந்தது. பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 209 பேர்ச் மொத்த நிலப்பகுதியும் | காணியை சட்ட ரீதியாக பணியத்திற்கு கையேற்றல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒப்பந்ததினதும் ஏனைய அவசர தேவைகளுக்காகவும் செலவிட வேண்டிய ரூபா 201,953,810 செலவினத்தை செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

சுற்றாடல் அமைச்சிற்கு கையளிப்பதற்கு முகாமைத்துவ சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. உரிய காணி பணியகத்தின் பேரில் கையேற்பதற்காக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இணக்கப்பாடு பெறப்பட்டவுடன் காணி ஆணையாளரினால் தற்போது பணியகம் ஸ்தாபிக்கும் இந்தக் காணி கையளித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக சுற்றாடல் அமைச்சின் மூலம் அமைச்சரவைக்கு உரிய காணியை கையளித்தல் தொடர்பாக எங்களின் கோரிக்கை அனுப்பப்பட்டிருந்த போதும் இதுவரையிலும் சட்டரீதியான கையளித்தல் நடவடிக்கைகள் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப் படவில்லை. பெறுகை குழு தீர்மானத்தை எடுக்கும் போது மற்றும் அதற்காக நியமிக்கும் போதும் மொத்தக் கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் ஒப்பந்தம் கையளிக்கும் போது தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இந்தக் கேள்வி அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் சகல பெறுகை நடவடிக்கைகளும் வரிசை அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த நடவடிக்கைகள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் போது உரிய செலவினங்கள் மாத்திரம்

| | | |
|---|---|---|
| | அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளமையை அவதானிக்கின்றோம். | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் 52(2) ஆம் பிரிவு மற்றும் 1997 சனவரி 10 ஆம் திகதிய 958 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 21(அ) ஆவது சுரங்கம் மற்றும் அகழ்வு கட்டளையின் பிரகாரம் அகழ்வுகளின் பின்னர் காணி புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் 02 மாதங்கள் முதல் 09 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திர காரர்கள் 874 பேர்களை அழைத்து அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்கூறப்பட்ட அனுமதிப்பத்திரதார்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பெறுமதி ரூபா 156,275,430 ஆன வங்கிப் பிணை பணமாக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணம் நிலத்தினை புனரமைப்பதற்கு பயன்படுத்தாமல் செலுத்த வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2009 இன் 66 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மீளமைப்பு திட்டத்தின் பிரகாரம் நிலத்தில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் புனரமைக்கப்படல் வேண்டும். அதற்கான கடப்பாடாக வங்கிப் பிணையொன்றின் அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்றது. குறித்த பிரகாரம் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாத அனுமதிப் பத்திரதாரர்களின் வங்கிப் பிணை பணியகத்தினால் பணமாக்கப்பட்டிருந்ததுடன் அனுமதிப்பத்திரதாரர்களின் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட குழிகளை புனரமைப்பதற்காக ஈடுபடுத்தி புனரமைப்புச் செய்வதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. புனரமைக்கப்பட்டதன் பின்னர் உரிய வங்கிப் பிணை விடுவிக்கப்படுகின்றது. மேலும் இந்த ஒழுங்கமைப்புக்களை செய்வதற்காக பணியகத்தில் சுரங்க பாதுகாப்பு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. | நிலத்தை புனரமைக்கும் நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |